அந்த கிராமத்திற்குப் போகிறபோது பேருந்திலே நின்று கொண்டு போகக் கூடிய அவல நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. எனவே இந்த நிலையைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு பேருந்தை வாணியம்பாடி முதல் வெள்ளக் குட்டை வரை என்பதை மட்டும் எக்ஸ்குளுசிவாக வெள்ளக் குட்டை கிராமத்திற்கே விட்டால் அங்கே இருக்கக் கூடிய மக்கள் அமர்ந்து செல்லக் கூடிய வசதியானது அவர்களுக்குக் கிடைக்கும் என்பதற்காக அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பிறந்த புண்ணிய பூமி என்று சொன்னார்கள். இவர்கள் பிறந்ததற்குப் பிறகு அந்த புண்ணிய பூமியே மாறியிருக்கும் என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், தமிழகத்தில் இந்த புண்ணிய பூமி யிலே பிறந்த காரணத்தினாலே உங்களைப் போன்றவர் களுடைய கோரிக்கையை அரசு உடனடியாக பரிசீலனை செய் யும். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருகிற 1 ஆம் தேதியிலிருந்து பட்டுக் கோட்டை அழகிரி போக்குவரத்துக்கழகம் வாணியம்பாடியிலிருந்து வெள்ளக்குட்டை கிராமத்திற்கு எக்ஸ்குளுசிவ்வாக நகரப் பேருந்துதை இயக்குமா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்பு மிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்றபோது ஏப்ரல் 1 ஆம் தேதி என்பதை அவர் மறந்து விட்டார் போல் தெரிகிறது. ஆகவே, அவருக்கு நினைவூட்டி 2 ஆம் தேதியிலிருந்து பேருந்தை அங்கே இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண்: 46, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

46—

பூம்புகார் தொகுதி, தில்லையாடியில் கைத்தறி நூற்பலை அமைத்தல்.

* 16885— திரு. எம். பூராசாமி:

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, தில்லையாடியில் கைத்தறி நூற்பாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்வி எழவில்லை.

திரு. எம். பூராசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்ட வீராங்கனை தில்லையாடி வள்ளியம்மை பிறந்து வளர்ந்த ஊர் தில்லையாடி. அங்கே கதர்த் துறை மூலம் கைராட்டினம் மூலம் நூல் நூற்கும் ஆலை அமைத்தால் பூம்புகார்ப் பகுதி மக்களுக்கு வேலை கிடைக்கும். மேலும் அரசு நிலங்கள் ஆயிரம் ஏக்கர் அந்தப் பஞ்சாயத்திலே உள்ளது. ஆகவே இடம் தாராளமாக இருக்கின்ற அந்த பூம்புகார் தொகுதியில் புரட்சித் தலைவி அரசிலே கூடிய சீக்கிரம் அடுத்த ஆண்டிலாவது தாங்கள் அமைக்க முன்வருவீர்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் உள்ள பூம்புகார் தொகுதியில் தில்லையாடிக்கு மிக அருகில் அமைந்துள்ள மணல்மேடு தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை 30,544 கதிர்களுடன் இயங்கி வருகிறது. இக்கூட்டுறவு நூற்பாலை தஞ்சை மற்றும் நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டங்களில் உள்ள நெசவாளர்களுக்குத் தேவையான நூல் ரகங்களை உற்பத்தி செய்து வருகிறது என்பதைத் தங்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 47, திரு. தி. சாத்தையா, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

47—

புத்திரைகொண்டான் அய்யனார் கோவில் பகுதியில் புதிய கண்மாய் அமைத்தல்.

*11809—திரு. தி. சாத்தையா :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—